DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 297/2022 | Taluk | : |
| Deposition of Witness for | : PW-1 | Calling | : |
| Name | : அருள்ராஜ் சந்திரமோகன் | Religion | : |
| Father / Husband Name | : அந்தோணிசாமி | Age | : |
| Village | : | | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 12th February 2026.

-----------------------------------------------------------------------------------------------

(எதிரி ஆஜர்).

முதல் விசாரணை:-

1) நான் தூத்துக்குடி மாவட்டம் ராயப்பபுரத்தில் தற்சமயம் குடியிருந்து வருகின்றேன். நான் வழக்கு புகார்தாரரான கௌதம் என்பவரின் கன்டேனர் லாரியில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை விபத்து நடந்த அன்று பார்த்தது தான். கடந்த 07-05-2022-ம் நான் புகார்தாரின் TN-47 AF-8025 எண் கொண்ட லாரியை நான் இயக்க புகார்தாரர் எனது அருகே அமர்ந்து தூத்துக்குடியில் இருந்து தஞ்சாவுருக்கு சென்று லோடு இறக்கிவிட்டு மறுநாள் தஞ்சாவுரில் இருந்து தூத்துக்குடி செல்வதற்காக அதிகாலை 4.30 மணியளவில் கொட்டக்குடி கண்மாய் அருகே வந்த போது எங்களுக்கு முன்னால் சென்ற டிப்பர் லாரியை அதன் ஓட்டுநர் திடீர்ரென நிறுத்தி திருப்பியாதால் நான் அந்த டிப்பர் லாரியின் மீது மோதி நிறுத்தினேன். பின்பு அந்த டிப்பர் லாரியை ஓட்டுநர் இயக்கி சென்றுவிட்டார். நான் இயக்கிய லாரியை இடது ஓரமாக நிப்பாட்டி லாரியில் நானும், புகார்தாரும் இறங்கி எங்களது லாரியை முன்புறத்தில் ஏற்பட்ட சேதத்தை பார்த்து கொண்டிருந்த போது ஆஜர் எதிரி போலிரோ வாகனத்தை அதிவேகமாக இயங்கி எங்கள் லாரியின் பின்பக்கம் மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார். எதிரி இயக்கிவந்த போலிரோ வாகனத்தில் இருந்த மற்றொருவருக்கும், எதிரிக்கும் அதில் காயம் ஏற்பட்டது. நாங்கள் லாரியில் இருந்து வெளியே நின்றதால் எங்களுக்கு காயம் ஏதுவும் இல்லை. காயம்பட்ட எதிரியையும், மற்றொருவரையும் 108-ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம். எதிரி ஓட்டிவந்த போலிரோ வாகனத்தின் பதிவு

எண் எனக்கு தற்சமயம் ஞாபகமில்லை, ஆனால் போலீசார் விசாரணையில் சொன்னேன். மேற்படி வழக்கு சம்பந்தமாக லாரி ஓனரான கௌதம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

1) விபத்து நடந்த இடத்திற்கு போலீசார் எப்போது வந்தனர் என்றால் சுமார் 1/2-மணி நேரத்தில் வந்தார்கள். அப்போது போலீசார் என்னை விசாரித்தார்கள். அதன்பிறகு விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என்னை விசாரித்த பின்பு தான் புகார்தாரர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கும் போது எனக்கு முன்னாள் சென்ற டிப்பர் லாரி பிரேக் அடித்து நின்றதாக தான் சொல்லியுள்ளேன் என்றாலும், நின்று திரும்பியதாக சொல்லவில்லை என்றாலும் சரிதான். ஆஜர் எதிரி அந்த வாகனத்தில் என்ன ஏற்றி கொண்டு வந்தார் என்றால் கோழி ஏற்றி வந்தார். சம்பவம் நடக்கும் போது எனக்கு முன்பாக டிப்பர் லாரி நின்றதா என்றால் இல்லை, சென்றுவிட்டது. நான் டிப்பர் லாரி மோதியவுடன் எனது லாரியை ஓரமாக நிப்பாட்டி இருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல, நான் ஓரமாக தான் லாரியை நிப்பாட்டியிருந்தேன். சம்பவ இட ரோடானது இரண்டு வாகனம் சென்றுவரக்கூடிய அளவிற்கு அகலமான ரோடு என்றால் சரிதான். டிப்பர் லாரியில் மோதிய என் லாரியின் முன்பக்கத்தை பார்த்து கொண்டிருந்த போது தான் இந்த வழக்கு விபத்து நடைப்பெற்றது என்றால் சரிதான். நான் முன்பக்க வண்டியை பார்த்து கொண்டிருந்ததால் பின்பக்கமாக வந்த எதிரியின் வாகனத்தை பார்க்கவில்லை என்றால் சரியல்ல, பார்த்தேன். நான் ரோட்டிற்கு எந்த திசையில் நின்றேன் என்றால் கிழக்கு திசையில் நின்றேன். நான் வாகனத்தை இடது பக்கம் நிப்பாட்டியதாலும், எனக்கு பின்னால் எதிரியின் வாகனம் வந்த போது எதிர்புறத்தில் இருந்து வேறொரு வாகனம் வந்ததால் தான் நான் வாகனத்தை நிப்பாட்டியதால் எனக்கு பின்னால் வந்த எதிரியின் வாகனம் விபத்துக்கு உள்ளானது என்றால் சரியல்ல. என்னுடைய கவனக்குறைவாலும், அஜாக்கிறதையாலும் நான் ரோட்டில் லாரியை நிப்பாட்டியதால் தான் இந்த வழக்கு விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. என்னுடைய வாகனத்தில் முன்விளக்கு வெளிச்சம் இல்லாததால் தான் டிப்பர் லாரியின் பதிவு எண்ணை நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவ சமயம் டிப்பர் லாரியின்

எண்ணை பார்த்தேன், ஆனால் தற்சமயம் எனக்கு ஞாபகமில்லை. விபத்து நடந்நதாக சொல்லும் இடத்தில் பாலம் இருந்ததா என்றால் இல்லை. வழக்கு விபத்திற்கு நான் தான் காரணம் என்றாலும், நான் தான் டிப்பர் லாரி மீது மோதி விபத்தை ஏற்படுத்தி நின்றதால் தான் எதிரியின் வாகனம் என் வாகனத்தின் மீது மோதியது என்றாலும், விபத்திற்கு நான் தான் காரணம் என்றாலும் சரியல்ல. எதிரியின் காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் இருந்ததை பயன்படுத்தி நான் என்னை காப்பற்றி கொள்ள நானும், புகார்தாரரும், எனக்கு முன்பாக சென்ற டிப்பர் லாரி ஓட்டுநரும் சேர்ந்து தப்பிபதற்காக முன்னெச்சரிக்கையாக காயம்பட்ட ஆஜர் எதிரியின் மீது பொய்யாக கௌதம் மூலம் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.